**DP/G5/2024/2**

எனது எண்: 6/5/புலமைப்பரிசில்/2024
பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை,
இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை, பத்தரமுல்ல.
2024 ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதி

சகல அதிபர்களுக்கும்,

**பாடசாலைக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்காக நடாத்தப்படும் பரீட்சை – 2024**

மேற்படி பரீட்சைக்கு தங்கள் பாடசாலை விண்ணப்பதாரிகளின் சுட்டெண்களும், பரீட்சை நிலையமும் காட்டப்பட்டுள்ள வரவு இடாப்பின் பிரதி இத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பரீட்சார்த்திகளின் பெயர்களை அவர்களது பிறப்புச்சான்றிதழுடன் ஒப்பிட்டு மீண்டும் செவ்வை பார்த்து அதன் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

02. பரீட்சார்த்திகளின் வரவு இடாப்பையே பரீட்சைக்கான அனுமதி அட்டையாக பயன்படுத்த வேண்டும்.

03. **விண்ணப்பதாரர்களின் வரவு இடாப்பு**

I. உங்களால் எமது தரவு தரவுத்தளத்திற்குள் நிகழ்நிலை (Online) முறைமையில் உள்ளடக்கப்பட்ட எவரேனும் விண்ணப்பதாரியின் பெயர், என்னால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கணினிப்பெயர்ப் பட்டியலில் உள்ளடக்கப்படாதிருப்பின் இது தொடர்பாக பரீட்சைகள் திணைக்களத்தின் பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையின் பரீட்சை ஆணையாளருக்கு உடனடியாக அறியத்தரவும்.

II. பார்வையற்ற பரீட்சார்த்திகள் இருப்பின் அவர்களுக்குரிய வசதிகள் தொடர்பாக கவனத்திற் கொள்வதற்காக அது தொடர்பாக பா.ப.ஒ. கிளையின் பரீட்சைகள் ஆணையாளர் அவர்களுக்கு உடனடியாக அறியத்தரவும்.

III. www.doenets.lk ஊடாகவோ அல்லது https://onlineexams.gov.lk/eic இணைப்பினூடாகவோ நுழைந்து வரவு இடாப்பை தரவிறக்கம் (Download) செய்து கொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

IV. எக்காரணத்திற்காகவேனும் உங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள வரவு இடாப்புப் பிரதியை மீண்டும் அனுப்பி வைக்க வேண்டாம்.

V. பரீட்சார்த்திகள் தொடர்பாக ஏதேனும் வேண்டுகோள் விடுக்கப்பட வேண்டுமாயின் அதிபரால் மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும். எந்தவொரு தனிப்பட்ட வேண்டுகோள் தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது.

04. ஒரே சமமான பெயருடைய பரீட்சார்த்திகள் உங்கள் பாடசாலையில் இருப்பின் அவர்களுக்குரிய அனுமதி அட்டையை வழங்குவதற்கு முன்னர் அவர்களின் முழுப்பெயரை பாடசாலைப் பிரதியுடன் ஒப்பிட்டு சரிபார்த்து அவர்களுக்குரிய அனுமதி அட்டைகளை வழங்கவும். இது தொடர்பாக சம்பவத்திரட்டுப் புத்தகத்தில் குறிப்பொன்றை இடவும்.

05. **திருத்தங்கள்**

i. வரவு அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் கீழே தரப்பட்டுள்ளவற்றில் திருத்தங்கள் ஏதுமிருப்பின் நிகழ்நிலை முறைமையில் www.doenets.lk ஊடாகவோ அல்லது https://onlineexams.gov.lk/eic இணைப்பினூடாகவோ நுழைந்து மேற்கொள்ள வேண்டும். 2024 செப்ரெம்பர் 02 ஆம் திகதி தொடக்கம் 2024 செப்ரெம்பர் 08 ஆம் திகதி வரையில் இதற்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

- பெயர்
- ஆண்/ பெண் பால்
- பிறந்த திகதி
- வருமானம்

**ii. வரவு இடாப்புடன் விண்ணப்பதாரிகளின் வருமான நிலைமையை சரியாக உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். திருத்தங்கள் இருப்பின் அவற்றை உடனடியாக அதிபரே நிகழ்நிலை முறைமையில் மேற்கொள்ள வேண்டும். இது அதிபரின் முழுப்பொறுப்பாவதுடன் பின்னர் சமர்ப்பிக்கப்படுகின்ற வேண்டுகோள்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்படமாட்டாதென்பதுடன் அதற்கான பொறுப்பை அதிபரே ஏற்றுக் கொள்ளல் வேண்டும். இது தொடர்பாக அனுமதி அட்டையை வழங்கும் போது பெற்றோர்களுக்கு அறியத்தரவும்.**

06. **கீழே குறிப்பிட்டுள்ள விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தவும்.**

i. வரவு இடாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை சுட்டெண்ணை பரீட்சார்த்திகளுக்கு தனித்தனியாக எழுதி அவர்களுடைய பரீட்சை சுட்டெண்ணை உரிய விடைப்பத்திரங்களில் சரியாக குறிப்பிடுவதற்கு அறிவுறுத்தல்களை வழங்குதல் வேண்டும்.

ii. பரீட்சார்த்திகளது சுட்டெண்களை பெரியளவில் அச்சடித்தோ, எழுதியோ, அவர்களது சட்டப்பையிலோ அல்லது சீருடையிலோ தெளிவாக காட்சிப்படுத்தியிருத்தல். இது தொடர்பாக பெற்றோர்களுக்கு தெரியப்படுத்தவும்.

iii. கடந்த வருடங்களைப் போன்று இம்முறையும் வரவு இடாப்பில் அந்தந்த பரீட்சார்த்திகளின் பெயருக்கு முன்பாக கையொப்பம் இடுவதற்காக ஒதுக்கப்பட்ட நிரலில் பரீட்சார்த்திகளிடமிருந்து கையொப்பத்தைப் பெற்றுக் கொள்க. இதற்கு மேலதிகமாக பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வரவு இடாப்பிலும் கையொப்பம் இடப்பட வேண்டுமென்பதையும் அதற்காக பரீட்சை நிலையத்திற்கு அரை மணித்தியாலத்திற்கு முன் சமுகமளிக்க வேண்டுமென்பதையும் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அறிவுறுத்துக. இது தொடர்பான சகல அறிவுறுத்தல்களையும் பரீட்சார்த்திகளுக்கும் வழங்கவும்.

iv. இத்திணைக்களத்தின் அனுமதியின்றி வரவு இடாப்பில் எந்தவொரு மாற்றமும் செய்தல் கூடாது என்பதுடன் தேவையேற்படின் விவரங்களைப் பெற்றுக் கொள்வதற்காக வரவு இடாப்பை பாதுகாப்பாக வைத்துக் கொள்ளவும்.

v. எதிர்கால பயன்பாடுகளுக்காக பரீட்சார்த்திகள் தமது சுட்டெண், பரீட்சை நடைபெற்ற வருடம், பரீட்சை நிலையம் என்பவற்றை குறித்து வைத்துக் கொள்ளுமாறு அறிவுரை வழங்கவும்.

07. **அடையாளம்**

மேற்குறிப்பிடப்பட்ட 6.iii ஆம் பந்தியில் குறிப்பிட்ட படி கையொப்பமிடப்பட்டு பெறப்பட்ட வரவு இடாப்பைப் பரீட்சை நிலையத்திற்கு எடுத்துச் சென்று அதன்படி பரீட்சார்த்திகளை மேற்பார்வையாளரிடம் ஆளடையாளத்தை உறுதிசெய்து அவர்களை உரிய ஆசனத்தில் அமர்த்தும்படி பரீட்சார்த்திகளுக்கு பொறுப்பாகச் செல்லும் ஆசிரியருக்கு அறிவுறுத்தவும்.

08. பரீட்சார்த்திகளை தமது பாடசாலையிலிருந்து பரீட்சை நிலையங்களுக்கு அழைத்துச் செல்வதற்கும் மீண்டும் அழைத்து வருவதற்கும், அதற்காக 40 மாணவர்கள் அல்லது அதற்குக் குறைவான எண்ணிக்கைக்கு ஒரு ஆசிரியருக்கு ரூபா 1000/-, மாணவர் எண்ணிக்கை 40 இற்கும் அதிகமாயின் இரண்டு ஆசிரியர்களுக்கு ரூபா 1000/- வீதம் வழங்கப்படும்.

09. உங்களுக்கு மேலதிக விவரங்கள் தேவைப்படின் கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு அல்லது தொலைபேசி இலக்கங்களூடாக தொடர்பு கொள்ளவும்.


பரீட்சைகள் ஆணையாளர்
பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை,
இலங்கை பரீட்சைகள் திணைக்களம்
பெலவத்தை, பத்தரமுல்ல.

| | | |
|---|---|---|
| **நேரடி தொலைபேசி இல** | : | **011-2784537, 2784208, 2786616, 2785922, 2785413** |
| **உடனடி தொலைபேசி இலக்கம்** | : | 1911 |
| **மின்னஞ்சல் முகவரி** | : | gr5schexam@gmail.com |
| **தொலைநகல் இலக்கம்** | : | 0112784422 |


எச்.ஜே.எம்.சீ. அமித் ஜயசுந்தர
பரீட்சை ஆணையாளர் நாயகம்

D:\New Volume\A\2024\gr5\Principal\DP-GR5-02.doc